DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC 19/2024**

Prosecution witness **PW.7 (LW.9)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Thangam | Caste | : | |
| Father Name | : | Appavu | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 53 |
| Time | : | | | | |

**(A1 produced from custody. A2 absent. Petition filed and allowed for A2. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **13.07.2026**
**(Witness appeared through Video conferencing).**

**13.07.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது கோயம்புத்தூர் மாநகர் VH ரோடு காவல் நிலையத்தில் புலனாய்வு துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு கோவை மாநகர் கரும்புக்கடை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது 13.09.2023 ம் தேதி மேற்படி காவல் நிலைய குற்ற எண்.311/2023 சட்டப்பிரிவு 379 இதச வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக நான் இருந்து, கடந்த 15.09.2023 ம் தேதி மேற்படி வழக்கு சம்பந்தமாக நான் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மேற்படி சுற்றுப்புற பகுதியில் அதிகமான வாகனங்கள் திருடுபோனதால் எனது காவல் படையுடன் அதே தேதியில் இரவு சுமார் 21.00 மணியளவில் புட்டுவிக்கி ரோடு செல்வபுரம் சந்திப்பில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த ஹரிவிக்னேஷ், சந்தோஷ் என்ற அப்பு ஆகியோர் போலிஸ் பார்ட்டியை கண்டதும் தாங்கள் ஓட்டி வந்த TN 99 X 4592 R 1 5 வாகனத்தை திருப்பிக்கொண்டு ஓட முயன்றவர்களை எனது பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து விசாரிக்கும் போது அந்த வாகனத்தில் வந்த இரண்டு பேரும் இளம்சிறார் என்பதாலும் அவர்களை அதே இடத்தில் கையகப்படுத்தி சம்பந்தப்பட்ட இளம்சிறார் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

2. இளம்சிறார் ஹரிவிக்னேஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 16.09.2023 ம் தேதி அதிகாலை 04.30 மணியளவில் எதிரி

ரவிச்சந்திரன் என்பவரை அவரது வீட்டிற்கு முன்பு வைத்து கைது செய்து, எதிரி எடுத்து ஆஜர் செய்த TN 43 J 0309 Dio Scooter, TN 59 A 8382 Yamaha RX100 ஆகியவற்றை சாட்சிகள் அஜ்மல் மற்றும் பைசல் ரகுமான் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். என்னிடம் காண்பிக்கப்படும் நீதிமன்ற சான்றிடப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் நான் தயரித்தது தான்.

3. பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தும், எதிரி சொன்ன வாக்குமூலத்தின் பேரில் TN 59 A 8382 Yamaha RX100 என்ற இருசக்கர வாகனமானது கேத்தி காவல் நிலைய குற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனம் என தெரிந்துகொண்டு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்து நீதிமன்றம் மூலமாக மேற்படி இருசக்கர வாகனத்தை மேற்படி காவல் நிலையத்திற்கு ஒப்படைத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

கேத்தி காவல் நிலையத்திலிருந்து கேட்டுக்கொண்டதன் பேரில் தான் நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி கைப்பற்றியதாக சொல்லப்படும் எந்த வாகனத்தையும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக நான் இவ்வாறு சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.